

சென்னை கிழக்கு மாவட்ட திமுக அம்பத்தூர் கிழக்கு பகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு ”செம்மொழி –22 இலட்சியக் கலையின் போராளி! இலக்கியம் செதுக்கிய படைப்பாளி!! எனும் தலைப்பில் பகுதிக் கழகச் செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜ் தலைமையில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு முன்னிலையில் அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் புகழரங்கத்தை துவக்கி வைத்தார். இதில் மூத்த பத்திரிகையாளர் ‘தராசு‘ சியாம், கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ. லியோனி, ஆண்டாள் பிரியதர்ஷினி ஆகியோர் புகழ் உரைத்தனர். உடன் மேயர். பிரியா ராஜன், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., பி.கே.மூர்த்தி எம்.சி, டி.எஸ்.பி. ராஜகோபால், சன்.பி.முனியாண்டி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி, எல்.பி.எஃப். மோகன், நீலகண்டன், நாகவள்ளி, ஏ.பி. பூர்ணிமா, து.ஆயிரம், கு.கிருஷ்ணமூர்த்தி, ஜெ.பாலமுருகன், மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், சீ.லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால் பி.செந்தில்.வி.ரவிந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் உள்ள சூர்யா கல்விக் குழும வளாகத்தில் நியூஸ் 7 தமிழ் தொலைக்காட்சி சார்பாக ”துளிரும் விஞ்ஞானி நிகழ்ச்சியில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் தொடங்கி வைத்து மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

### ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற பயணம் தொடக்கம்

# வாக்குச் சாவடி ஏஜெண்டுகளுக்கு 3 நாட்கள் பயிற்சி!

### கழக தொழில்நுட்ப அணிச் செயலாளர் – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டி!



சென்னை, ஜூன் 26-

தமிழ் இனத்தை எதிர்த்து வரும் எதிரிகளையும், தமிழ் இனத்திலேயே இருந்துகொண்டு துரோகம் செய்யும் துரோகிகளையும் முறியடிக்க வேண்டும். அதற்காக இந்த ஓரணியில் தமிழ்நாடு என்ற மகத்தான பயணத்தைத் தொடங்கி இருக்கிறோம் என்றும் நாளை முதல் மூன்று நாட்களுக்கு வாக்குச்சாவடி முகவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்று 25.06.2025 அன்று பிற்பகல் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் தொழில்துறை அமைச்சரும், கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளருமான, டி.ஆர்.பி. ராஜா செய்தியாளர்களைச் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட நாளில், “தம்பி வா, இனத்திற்காக இரத்தம் சிந்த வா” என்று கம்பீரமாக அழைத்தார் பேரறிஞர் அண்ணா. அடுத்துவந்த கலைஞர் இந்த இயக்கம் இருக்கிறது, இருக்க வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும் எனச் சொன்னார். 75 ஆண்டுக் கடந்து செல்கிற இந்த இயக்கம், 100 ஆண்டுக் காலத்தையும் கடந்துசெல்ல, இந்த இயக்கத்தைப் புதுப்பிக்க நினைக்கிறார் நமது முதலமைச்சர்.

டீ கடை முதல் டிவிட்டர் வரை இந்த இயக்கத்தின் பிரச்சாரம் பயணித்து இருக்கிறது. 89 வயதில் கலைஞர் அவர்கள் டிவிட்டரில் செயல்பட்டார். ஒவ்வொரு நாளிலும் சமூக வலைதளத்தைக் கூர்ந்து கவனித்தார். எதற்காக அதைச் செய்தார் என்றால், ஒவ்வொரு நாளும் மக்களுடன் தொடர்பில் இருக்க வேண்டும், மக்களின் பிரச்சனையை உடனடியாகச் சரி செய்ய வேண்டும் என நினைத்திருந்தார்.

கழகத் தலைவர் அவர்களும் டிஜிட்டல் தளங்களின் செயல்களை முழுமையாக உள்வாங்கியிருந்தார். இன்று இது வரை வரலாறு காணாத அளவிற்கு எந்த ஓர் இயக்கமும் செய்யாத விஷயம், ஒரு மக்கள் இயக்கம், 68,000 பூத் ஏஜண்ட்களை (BDA) வைத்து, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இல்லங்களுக்கும் நேரடியாகச் சென்று, அங்கு இருக்கும் மக்களிடையே திமுகவின் திட்டங்கள் எல்லாம் அவர்கள் சென்று சேர்ந்து இருக்கிறதா எனச் சரி பார்க்க இருக்கிறார்கள். அப்படி இல்லை என்றால், அதைக் கொண்டு போய் சேர்க்கும் வேலையை அவர்கள் செய்ய இருகிறார்கள்; இதுவரை எவ்வளவோ மக்கள் நலத்திட்டங்களைத் திமுகச் செய்திருக்கிறது; அதையெல்லாம் மக்களிடம் கொண்டு பொய் சேர்த்து இருக்கிறோம். ஆனால் சரி பார்க்கும் வேலையை இது வரை எந்தவொரு தலைவரும் செய்ததில்லை; அப்படிப்பட்ட மகத்தான தலைவராக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார்.

இன்று ஒரு மாபெரும் பயணத்தைத் தொடங்கி இருக்கிறோம். இந்த இனத்தை எதிர்த்து வரும் எதிரிகளையும், இந்த இனத்திலேயே இருந்து கொண்டு துரோகம் செய்யும் துரோகிகளையும் முறியடிக்க வேண்டும். அதற்காக இந்த மகத்தான பயணத்தைத் தொடங்கி இருக்கிறோம்.

இந்தப் பயணத்தின் வழியாகத் தமிழ் இனத்திற்காக, தமிழ்நாட்டிற்காக, தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்காக, ஒட்டுமொத்த தமிழ் மக்களின் எழுச்சிக்காக நீங்கள் எல்லோரும் ஓரணியில் திரண்டு, தமிழ் நாட்டிற்காக நிற்க விரும்புகிறீர்களா என்ற கேள்வியை மக்களிடத்தில் கொண்டு போய்ச் சேர்க்க இருக்கிறோம்.

இந்த இனத்தின் எதிர்கள், கூடவே இருந்து குழி பறிக்கும் துரோகிகள் இவர்கள் எல்லோரையும் முறியடிக்க வேண்டும். இதற்குத் தமிழ்நாட்டு மக்கள் ஓரணியில் திரள வேண்டும்; அந்த அணியின் தலைவராகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இருக்க வேண்டும். அவர் இருந்தால் மட்டும் தான் விடியல் என்ற உண்மையை அவர்கள் இடத்தில் கொண்டுபோய் சொல்ல இருக்கிறோம்.

இந்தப் பயணம் ஜூன் 25 ஆம் தேதி ஆரம்பித்து இருக்கிறது. இந்தப் பயணத்தில் இன்று 234 தொகுதிகளிலும் இருந்து எங்களின் ஐ.டி.விங், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தகவல் தொழில்நுட்ப அணிக்கு இந்தப் பணியை வழங்கிய திராவிட நாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பணியை இன்று 234 OTNAC எனப்படும் ஓரணியில் தமிழ்நாடு ASSEMBLY CO-ORDINATOR அந்தத் தொகுதி பார்வையாளர்களை நியமித்து அவர்களுக்குப் பயிற்சியை வழங்கியிருக்கிறோம்.

அடுத்ததாக இந்த 234 பேரும் 27 ஆம் தேதி தொடங்கி 29 வரை மிகப் பிரம்மாண்டமாக அங்கே இருக்கும் தொகுதிகளில் வாக்குச்சாவடி, பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்களுக்குப் பயிற்சியைக் கொடுக்க இருக்கிறார்கள். அந்தப் பயிற்சியில் பூத்களின் பாகங்களைப் பிரித்துக் கொண்டு அவர்களுக்கும் பயிற்சி கொடுக்க இருக்கிறார்கள்.

ஜூலை 1 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் இந்தப் பணியை முழுமையாகத் தொடங்கி வைப்பார். அடுத்தக்கட்டமாக இந்த மாபெரும் பணியை ஜூலை 2 ஆம் தேதி மாவட்ட கழகச் செயலாளர்கள் கையில் எடுப்பார்கள்.

அடுத்து ஜூலை 3 ஆம் தேதி இந்த மாபெரும் இயக்கம் மக்கள் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு பொய் சேர்த்து; அதன்மூலம் இந்த இயக்கத்திற்குப் புதிய ரத்ததையும் பாய்ச்சி, உறுப்பினர் சேர்க்கையும் தொடங்கப் போகிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்த முயற்சி இதுவரை இந்தியாவில் நடந்ததில்லை; உலகிலேயே எங்கும் நடந்ததில்லை என்று தான் கூறவேண்டும். எதிரணியில் இருக்கும் பலருக்கு பூத் ஏஜெண்ட்களே இல்லாமல் இருப்பார்கள்; ஆனால் திமுகவுக்கு மட்டும்தான் BDA என்ற பொறுப்பையும் உருவாக்கி தரும் தெம்பு, திராணி இருக்கிறது.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

### ஒய் பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமை: கிருஷ்ணகிரியில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

### திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை!

கிருஷ்ணகிரி, ஜூன் 26 -

கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் குடிநீர் தாகத்தை தீர்க்க ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தை வழங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற கூட்ட த்தில் மாநகர செயலாளரும், மேயருமான சத்யா, வரவேற்புரை ஆற்றினார்.

ஒன்றிய செயலாளர்கள் கஜேந்திரமூர்த்தி, ஸ்ரீனிவாசலூ ரெட்டி, திவாகர், சின்ராஜ், நாகேஷ், ரகுநாத், பாக்யராஜ், கருணாகரன், ஸ்ரீதர், ராஜா (எ) தணிகாசலம், பகுதி செயலாளர்கள் ஆனந்தய்யா, ராமு பேரூர் கழக செயலாளர்கள் சீனிவாசன், தஸ்தகீர், மாநகர அவை தலைவர் செந்தில்குமார், மாநகர துணை செயலாளர் கோபாலகிருஷ்ணன் முன்னாள் நகர செயலாளர் மாதேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

மாவட்ட துணை செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் துணை பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., சிறப்புரையாற்றினார் கழக துணை பொதுசெயலாளர் திருச்சி சிவா பேசும் போது ஓசூரில் 3 சிப்காட் களை நிறுவியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தற்போது முதல்வர் அவர்கள் 4வது சிப்காட்டை நிறுவி, அதில் பன்னாட்டு நிறுவனங்களை கொண்டு வந்ததால், இளைஞர்களுக்கு அதிகளவில் வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. தமிழ்நாட்டில் அரசு மற்றும் அலுவல் மொழியாக தமிழும், ஆங்கிலமும் மட்டும் தான் என அண்ணா தெரிவித்தார். இருமொழிக் கொள்கை மூலம் படித்த தமிழர்கள், உயர் பதவிகளை வகித்து வருகின்றனர்.

கூகுள் நிறுவனத்தில் உயர் பதவியை வகித்து வரும் சுந்தர்பிச்சை, இருமொழிக் கொள்கையில், அரசு பள்ளியில் படித்தவர். நிலவில் தண்ணீர் இருக்கிறது என்று கண்டுபிடித்த சந்திரயானை உருவாக்கிய இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை, அக்னி 1 பிதாமகன் அப்துல்கலாம் ஆகியோரும்,

இருமொழிக் கொள்கையில் படித்தவர் கள்தான். அமெரிக்கா பொருளாதாரத்தில் பெரும்பான்மையை தீர்மானிக்கிறவன் தமிழன். பல நாடுகளில் ஆளுகின்ற பிரதிநிதிகளாக இருப்பவர்கள் தமிழர்கள். எங்களை பார்த்து, இதைப்படித்தால் தான் உருப்பட முடியும் என்று போதிக்கின்ற தகுதி எவருக்கும் இல்லை. இவ்வாறு திருச்சி சிவா எம்.பி. பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ், மாவட்ட பொருளாளர் சுகுமாரன், இளைஞரணி மாநில துணை செயலாளர் சீனிவாசன், பொருளாளர் சுகுமாரன், மாநில விவசாய அணி துணை செயலாளர் அரியப்பன், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ஞானசேகரன், மாவட்ட துணை செயலாளர்கள் சின்னசாமி, புஷ்பா சர்வேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வீரா ரெட்டி, எல்லோரா மணி, கிரீஸ் பொதுக் குழு உறுப்பினர்கள் ஜெயராமன், சீனிவாசன், தனலட்சுமி, அருணா பூசன்குமார், முனிராஜ், அப்துல்கலாம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சுமன், மாணவரணி அமைப்பாளர் கண்ணன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பி.கே. ஆர்.ரவி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர் கள், துணை அமைப்பாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் வார்டு வட்டக்கிளை செயலாளர்கள் BLA-2, BLC தோழர்கள் மற்றும் கழக முன்னோடிகள், பெண்கள் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 1.7.2025 | திருப்போரூர் வடக்கு ஒன்றியம் | தையூர் | நாகம்மை கருப்பையா ரூ.கீர்த்தனா |
| 2 | 1.7.2025 | திருப்போரூர் பேரூர் | வார்டு–4, மடம் தெரு | நாகம்மை கருப்பையா ரூ.கீர்த்தனா |
| 3 | 2.7.2025 | திருப்போரூர் தெற்கு ஒன்றியம் | மையிலை | வண்ணை புகாரி மா.பூபதி |
| 4 | 2.7.2025 | மாமல்லபுரம் நகரம் | வார்டு–9, அண்ணா நகர் பகுதி. | வண்ணை புகாரி மா.பூபதி |
| 5 | 3.7.2025 | திருக்கழுக்குன்றம் | நெம்மேலி | காஞ்சி தாவூத் நா.அருண் |
| 6 | 3.7.2025 | திருக்கழுக்குன்றம் பேரூர் | வன்னியர் தெரு | காஞ்சி தாவூத் நா.அருண் |
| 7 | 4.7.2025 | செங்கல்பட்டு நகரம் | நெல்லு மண்டி, மேட்டு தெரு, மார்க்கெட் ரோடு. | ஆரணி மாலா பா.ஸ்ரீலேகா |
| 8 | 4.7.2025 | காட்டாங்கொளத்தூர் தெற்கு ஒன்றியம் | பஜார் வீதி, சிவபெருமாள் கோயில். | ஆரணி மாலா பா.ஸ்ரீலேகா |
| 9 | 5.7.2025 | மறைமலைநகர் நகரம் | செங்குன்றம் | ரஜினிகாந்த் தே.சிலம்பரசன் |
| 10 | 5.7.2025 | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகரம் | ரயில்வே ஸ்டேஷன் ரோடு | ரஜினிகாந்த் தே.சிலம்பரசன் |
| 11 | 6.7.2025 | காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றியம் | ஊரப்பாக்கம் | கவிஞர் தமிழதாசன் செ.ஜோதி |
| 12 | 7.7.2025 | குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் | படப்பை | காஞ்சி ப.மீனாட்சி சுந்தரம் அ.தா.டெக்சின் ரெமோரியா |
| 13 | 7.7.2025 | திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் | பால் நெல்லூர் | காஞ்சி ப.மீனாட்சி சுந்தரம் அ.தா.டெக்சின் ரெமோரியா |
| 14 | 8.7.2025 | திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம் | திருமங்கலம் | விஷார் தமிழரசன் பம்மல் தினேஷ் |
| 15 | 8.7.2025 | திருப்பெரும்புதூர் பேரூர் | தேரடி அருகில் | விஷார் தமிழரசன் பம்மல் தினேஷ் |
| 16 | 9.7.2025 | குன்றத்தூர் நகரம் | புது வட்டாரம் | சென்னை அரங்கநாதன் நா.அருண் |
| 17 | 9.7.2025 | மாங்காடு நகரம் | சக்கராநகர் | சென்னை அரங்கநாதன் நா.அருண் |
| 18 | 10.7.2025 | குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் | பரணிப்புத்தூர் | சேலம் சுஜாதா ரூ.கீர்த்தனா |
| 19 | 10.7.2025 | ஆலந்தூர் வடக்குப் பகுதி | மானப்பாக்கம் | சேலம் சுஜாதா ரூ.கீர்த்தனா |
| 20 | 11.7.2025 | ஆலந்தூர் தெற்குப் பகுதி | நேரு குடியிருப்பு | தமிழ் சாதிக் தி.கோகுல் |
| 21 | 11.7.2025 | கண்டோன்மெண்ட் நகரம் | கரையார் கோயில் தெரு | தமிழ் சாதிக் தி.கோகுல் |
| 22 | 12.7.2025 | புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் | கவுல் பஜார் | தாம்பரம் ஜின்னா பா.ஸ்ரீலேகா |
| 23 | 12.7.2025 | பம்மல் வடக்குப் பகுதி | குளக்கரைத் தெரு, அனகாபுத்தூர். | முகலிவாக்கம் தங்கம் மா.பூபதி |

காஞ்சிபுரம்

நாள் : 25.06.2025

கலைஞர் 100 1924 - 2023

